BESE-046

# இளநிலை கல்வியியல் பருவத்தேர்வு (B.Ed.)

## Term-End Examination

## December, 2007

## BESE-046 : தமிழ் கற்பித்தல் (TEACHING OF TAMIL)

*Time allowed : 3 hours* *Maximum Weightage : 70%*

*குறிப்பு :*

*(அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.*

*(ஆ) அனைத்து வினாக்களுக்கும் மதிப்பெண்கள் சமம்.*

**1.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

மொழி கற்பிக்கும் ஆசிரியர் பாடக்குறிப்பு தயாரிக்க வேண்டியதன் இன்றியமையாமையையும், அவ்வாறு தயாரிப்பதன் பயன்களையும் எடுத்துரைக்க. நல்ல தொரு பாடக் குறிப்பின் உட்கூறிகளையும் விவரிக்க.

அல்லது

மொழி கற்பித்தலில, பேச்சுத் திறன் கற்பித்தல் முக்கிய இடம் பெறுகிறது என்பதனை எவ்வாறு வலியுறுத்துவீர் ? மாணவர் தம் பேச்சில் காணப் படும் குறைபாடுகளச் சுட்டி அவற்றை எங்ஙனம் களைவீர் என்பதனையும் விளக்குக.

**2.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

பள்ளிகளில் இலக்கணம் கற்பித்தலுக்கு மேற்கொள்ளக் கூடிய வழி முறைகளில் மூன்றினைத் தக்க எடுத்துக் காட்டுக்களுடன் விளக்குக.

**அல்லது**

அடை வுத் தேர்வின் வகைகளை விளக்கி ஒரு நல்ல அடைவுத் தேர்வின் பண்புகளைத் தொகுத்துரைக்க.

**3.** கீழ்க்காணும் விளாக்களில் ஏதேனும் 4 விளாக்களுக்கு 150 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

(i) சொற் களஞ்சயிப் பெருக்கம் என்றால் என்ன ? உயர் நிலைப் பள்ளி மாணவரிடையே இதனை வளர்ப்பதற்கு நீவிர் கையாளக் கூடிய வழி முறைகள் யாவை ?

(ii) நுண்ணிலை கற்பித்தல் திறன்களில் இரண்டினை அவற்றின் துகள் திறன்களுடன் விளக்குக.

(iii) விளையாட்டு முறையின் அடிப்படைக் கோட்பாடுகளையும், அதனைப் பயன்படுத்துவதால் ஏற்படக் கூடிய நிறைகளையும் விளக்குக.

(iv) கேட்குந் திறனின் மூன்று நிலைகள் யாவை ? அவற்றை வளர்ப்பதற்காள வழிமுறைகள் யாவை ?

(v) மொழிப் பாடத்தில் துணைப் பாடமும் இடம் பெற வேண்டியதன் தேவையை விளக்குக.

(vi) மொழிப் பாடத்தில் நல்ல செய்யுள் பகுதிகளளச் சேர்ப்பதால் நிறைவேறக் கூடிய நன்னோக்கங்கள் எவை ?

(vii) மொழிப் பாடத்தில் எழுத்துக கட்டுரையைத் திருத்தும் போது ஆசிரியர் கவனத்திலிருக்க வேண்டிய்வை யாவை ?

(viii) மாணவர்கள், வாய்க்குள் படிக்கும் திறனை வளர்த்துக் கொள்ள நீவிர் அளிக்கத் தத்க பயிற்சிகள் யாவை ?

4. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

மொழிப்பாடத்திற்கு நூலகம் மிகவும் இன்றியமையாதது. ஆனால் பல மாணவர்கள் நூலகங்களை நன்கு பயன்படுத்துவதில்லை. மொழியாசிரியர் என்ற முறையில் இதுபோன்ற மாணவர்களிடையே நூலகங்களை முறையாக பயன்படுதும் எண்ணங்களை வளர்ப்பதற்கு தாங்கள் மேற்கொண்ட முயற்சிகளை விளக்கமாக குறிப்பிடுக.